

திருவள்ளூர் மாவட்டத்திற்கு பொறுப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி திருவள்ளூர் மாவட்டத்திற்கு வருகை புரிந்துள்ளதை தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் நேரில் சந்தித்து பூக்கொத்து வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.




திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மாநகராட்சி எம்.வி.எம். நகரில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் ரூ.132.52 கோடி மதிப்பீட்டில் திண்டுக்கல் மாநகராட்சி, 6 பேரூராட்சிகள் மற்றும் 6 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 636 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் மறு சீரமைப்பு திட்டப் பணிகள் மற்றும் திண்டுக்கல் மாநகராட்சி பகுதியில் ரூ.19.68 கோடி மதிப்பீட்டில் மூலதன மானிய நிதியின் கீழ் வடிகால், சிறுபாலம் கட்டும் பணிகள் மற்றும் ரூ.6.72 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சாலை அபிவிருத்தி பணிகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு திட்டப்பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். அருகில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர்வ.தட்சிணாமூர்த்தி, நகராட்சி நிருவாக இயக்குநர் பா.பொன்னையா, பேரூராட்சிகளின் இயக்குநர் கிரண் குராலா, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர்ப.வேலுச்சாமி, பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி ஜோ.இளமதி ஜோதிபிரகாஷ் உட்பட பலர் உள்ளனர்.

# பிரதமரின் துரோகத்திற்கு தமிழிசை தமிழ் முலாம் பூச வேண்டாம்!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, மே 30-

புதிய நாடாளுமன்ற திறப்பு குறித்து தமிழிசை சௌந்தரராஜன் புகழாரம் சூட்டுவது ‘பிரதமரின் துரோகத்துக்கு தமிழிசை தமிழ் முலாம் பூச வேண்டாம்’ என ‘தீக்கதிர்’ நாளேடு தனது 29.5.2023 தேதிய நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.



தீக்கதிர்
2023 மே 29 திங்கட்கிழமை
துரோகம் இழைப்பது யார்?
புதிய நாடாளுமன்ற கட்டடத்தில் செங்கோல் நிறுவப்பட்ட நிகழ்வு தமிழர்களுக்கு கிடைத்த மிகப்பெரிய பெருமை என்று மெய்சிலிர்த்ததாக கூறியுள்ளார் தமிழிசை சவுந்தரராஜன். இந்த நிகழ்வை புறக்கணித்தவர்கள் தமிழுக்கும் தமிழ்க் கலாச்சாரத்திற்கும் துரோகம் செய்து மிகப்பெரிய வரலாற்றுப் பிழையை ஆற்றியிருக்கிறார்கள் என்றும் சாபமிட்டிருக்கிறார். அத்துடன் தமிழுக்கு மகுடம் சூட்டியதற்காக பிரதமருக்கு கோடானுகோடி மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாகவும் கூறியுள்ளார்.
ஒரு ஜனநாயக நாட்டில் மன்னராட்சி

அது வருமாறு:-

புதிய நாடாளுமன்ற கட்டடத்தில் செங்கோல் நிறுவப்பட்ட நிகழ்வு தமிழர்களுக்கு கிடைத்த மிகப் பெரிய பெருமை என்று மெய்சிலிர்த்ததாக கூறியுள்ளார் தமிழிசை சவுந்தரராஜன். இந்த நிகழ்வை புறக்கணித்தவர்கள் தமிழுக்கும் தமிழ்க் கலாச்சாரத்திற்கும் துரோகம் செய்து மிகப்பெரிய வரலாற்றுப் பிழையை ஆற்றியிருக்கிறார்கள் என்றும் சாபமிட்டிருக்கிறார். அத்துடன் தமிழுக்கு மகுடம் சூட்டியதற்காக பிரதமருக்கு கோடானுகோடி மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாகவும் கூறியுள்ளார்.

ஒரு ஜனநாயக நாட்டில் மன்னராட்சி ஆட்சிக் காலத்து செங்கோல் நிறுவப்படுவது முற்றிலும் அதன் நோக்கத்துக்கு எதிரானது. அத்தகைய செயலை தேசியம் என்ற பெயரிலும் தெய்வீகம், புனிதம் என்ற போர்வையிலும் ஆர்.எஸ்.எஸ். இயக்குகின்ற பா.ஜ.க. ஒன்றிய அரசு, முதல் பிரதமராம் நேருவுக்கு தமிழ்நாட்டிலிருந்து ஆதீனம் சார்பாக வழங்கப்பட்ட செங்கோலை திடீரென்று தேடிக் கண்டுபிடித்து மரியாதை செய்வதாக பம்மாத்து வேலைகள் செய்கிறது.

இந்த திறப்பு விழாவில் புதிய நாடாளுமன்றத்தில் முதன்முதலில் புகுந்தது நம் தமிழ் என்று தமிழிசை புளகாங்கிதம் அடைந்திருக்கிறார். நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தமிழ்நாட்டு உறுப்பினர்கள் தமிழிலேயே பேசுவதற்கும் அதற்கு அமைச்சர்கள் தமிழிலேயே பதில் அளிப்பதற்கும் வசதி ஏற்படுத்தித் தந்திருந்தால் அது தமிழுக்குப் பெருமையாக இருந்திருக்கும். ஒன்றிய அரசும் பிரதமர் மோடியும் தமிழ் மீது உண்மையிலேயே பற்றும் பாசமும் வைத்திருப்பதாக இருக்கும். ஆனால் அவ்வாறின்றி கட்டடத் திறப்பு விழாவில் வேத மந்திரங்கள் முழங்க ஹோமம் நடத்தியிருக்கும் சூழலில், தமிழுக்குப் பெருமை சேர்த்திருப்பதாக பிரதமருக்கு கோடானுகோடி நன்றியை மனமார தெரிவிப்பதாகதமிழிசைகூறியிருப்பது முரணாக இல்லையா?

வேண்டுமானால் தமிழக மக்களின் ஆதரவைப் பெற்று சட்டமன்றத்திற்கோ நாடாளுமன்றத்திற்கோ செல்ல முடியாத தமிழிசையை மாநில ஆளுநராக நியமித்து தெலுங்கானா, புதுவை சட்டமன்றங்களுக்கு செல்லும் வாய்ப்பை தந்திருப்பதற்காக இந்த நன்றியை தெரிவிக்கிறாரோ தமிழிசை.

இந்திய அரசமைப்புச் சட்டப்படி நாட்டின் தலைவராகத் திகழும் குடியரசுத் தலைவரை புறக்கணித்துவிட்டு பிரதமர் மோடியே திறப்பு விழா நடத்துவதை எதிர்த்தே 20 எதிர்க்கட்சிகள் இந்த விழாவை புறக்கணித்தன. ஆனால் பிரதமர் மோடி ‘என் நாடாளுமன்றம் என் பெருமை’ என்று பலரும் டுவிட்டரில் பதிவிட்டு வருவதாகக் கூறியிருக்கிறார். இதுதான் அவரது உள்ளக் கிடக்கை என்பது வெளியாகிவிட்டதல்லவா?

உண்மையில் தமிழுக்குப் பெருமை சேர்ப்பதாக இருந்தால் தமிழ் வளர்ச்சிக்காக ஒன்றிய அரசு ஒதுக்கிய தொகையில் அது தெரியும். ஆனால், தமிழுக்கு ஒதுக்கியது 2017-20இல் வெறும் ரூ.23 கோடி என்பதும், தெலுங்கு, கன்னட மொழிகளுக்கு தலா ரூ.3 கோடி என்பதும் ஆனால் சமஸ்கிருதத்திற்கு ஒதுக்கப்பட்டது ரூ.643 கோடி என்பதிலிருந்தும் யார் தமிழுக்கு துரோகம் செய்கிறார்கள் என்பது நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களின் துரோகத்திற்கு தமிழிசை தமிழ் முலாம் பூச வேண்டாம்.

இவ்வாறு ‘தீக்கதிர்’ தலையங்கத்தில் கண்டனத்தை பதிவிட்டுள்ளது.

# கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், மே 30-

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம், இன்று (30.5.2023 - செவ்வாய்க் கிழமை) மாலை 4.00 மணியளவில், வடலூர், மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் து.தங்கராசு அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.



அதுசமயம் மாநில, மாவட்டக்கழகநிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் மாவட்ட இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்பு சாரா தொழிலாளர் அணி, அயலக அணி, தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும் சிறப்பாகக் கொண்டாடுவது சம்பந்தமாக.

2. ஜுன் 3 வடசென்னையில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கட்சித் தலைவர்கள் கலந்துக் கொள்ளும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்துக் கொள்வது சம்பந்தமாக.

3. ஜுன் 20ஆம் நாள் திருவாரூரில் “கலைஞர் கோட்டம்” திறப்பு விழா பீகார் மாநில முதலமைச்சர் மாண்புமிகு நிதிஷ்குமார் அவர்கள் திறந்து வைத்துச் சிறப்பிக்க உள்ளார். இந்த விழா முழுநாள் நிகழ்வாகக் கவியரங்கம், பட்டிமன்றம் பொதுக்கூட்டம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளுடன் நடைபெற இருப்பதால் இதில் கலந்துக் கொள்வது சம்பந்தமாக.

4. ஜுன் 3 அன்று கிளைக் கழகங்கள் தொடங்கி, அனைத்து அமைப்புகளின் சார்பிலும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை வைத்து கழகத் தோழர்கள் அனைவரும் மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செய்திடுவது சம்பந்தமாக.

5. ஜுன் 3 பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கிளைக்கழகங்கள் தோறும் கொடியேற்றி, பொதுக்கூட்டங்கள் நடத்தி, தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடத்தியும், இனிப்புகள் வழங்கியும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும் கொண்டாடுவது சம்பந்தமாக.

6. உறுப்பினர் சேர்த்தல் முழுமைப்படுத்துதல் சம்பந்தமாக.

7. இளைஞரணி சார்பாக தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடத்துவது.

8. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாட்டில்

# 3 அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி ரத்து!

## ஆர்ப்பாட்டம் நடத்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானம்!

சென்னை, மே 30 -

தமிழ்நாட்டில் 3 அரசு மருத்துவக் கல்லூரிகள் அனுமதியை ஒன்றிய அரசு ரத்து செய்துள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்நாடு மாநில இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம் நடத்துகிறது.

இது குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழுக் கூட்டம் சென்னையில் 27.05.2023 அன்று சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, தேசிய செயலாளர் டாக்டர் கே. நாராயணா ஆகியோர் பங்கேற்றனர்.

மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் செயல்பாட்டு அறிக்கையை முன்வைத்து பேசினார்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**அரசு மருத்துவக் கல்லூரிகளின் அங்கீகாரம் ரத்துக்கு கண்டனம்**

தமிழ்நாடு அரசின் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி, திருச்சி கி.ஆ.பெ. விசுவநாதம் அரசு மருத்துவக் கல்லூரி, தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி ஆகிய மூன்று அரசு மருத்துவக் கல்லூரிகளின் இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான அங்கீகாரத்தை தேசிய மருத்துவ கல்வி வாரியம் ரத்து செய்திருக்கிறது.

இந்த மருத்துவக் கல்லூரிகளில், கைரேகை வழியாக வருகைப் பதிவு செய்யும் கருவிகள், சரியான வகையில் பேராசிரியர்களின் விபரம் பதிவாக வில்லை என்றும், சி.சி. டி.வி. காமிராக்கள் செயல்படவில்லை என்றும் காரணங்கள் கூறி அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்ககம், இந்திய மருத்துவ ஆணையத்துக்கு தக்க வகையில் விளக்கம் தந்துள்ளது. மேலும் இவை மருத்துவக் கல்லூரியின் போதனைத் தரம் பற்றியதோ அல்லது சரிசெய்ய முடியாத பெரிய சீர்கேடுகளோ அல்ல என்பது எளிய உண்மையாகும்.

இவற்றை முன்னிறுத்தி தேசிய மருத்துவ கல்வி வாரியம், மூன்று கல்லூரிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்துள்ளது, அதிகபட்சமான கடுமையான நடவடிக்கை ஆகும். இந்த நியாயமற்ற நடைமுறையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு வன்மையாகக் கண்டிப்பதுடன் அற்பக் குறைகளைக் காரணம் காட்டி, இவற்றின் அங்கீகாரத்தை ரத்து செய்வது, தமிழ்நாட்டில் மருத்துவக் கல்வி உரிமையை பறிக்கும் நோக்கம் கொண்டது என்பதை சுட்டிக் காட்டுகிறது.

ஒன்றிய ஆட்சியில் இருக்கும் கட்சிக்கு, மாநிலத்திலும் வாக்களித்து ஆட்சிக்கு தேர்வு செய்தால், அது ‘டபுள் எஞ்சின்’ அரசு என்று பா.ஜ.க. தலைவர்கள் தேர்தல் பரப்புரை செய்கிறார்கள். வேறு கட்சி ஆளும் மாநிலம் எனில், ஒரு என்ஜினை ஒன்றிய அரசு கழற்றிவிடும் என்பதன் வெளிப்பாடு மருத்துவக் கல்லூரிகளின் அங்கீகார ரத்து நடவடிக்கையாகும்.

பா.ஜ.க. அல்லாத மாநில அரசுகளை சீர்குலைக்கும் வேலைகளை ஒன்றிய அரசு செய்து கொண்டிருக்கிறது. அதன் ஒரு பகுதியாகவே, மருத்துவத் துறையில் பல சாதனைகளை செய்த, மிகச்சிறந்த கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட தமிழ்நாட்டின் மூன்று அரசு மருத்துவக் கல்லூரிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்து இருப்பதைப் பார்க்க முடியும். இதனால் இந்த ஆண்டில் மருத்துவக் கல்லூரி மாணவர்களை சேர்க்க இயலாது போய்விடும்.

மருத்துவ தேசிய ஆணையம் சுட்டிக்காட்டும் குறைகளை சரி செய்ய முடியும் என்பதை கருத்தில் கொண்டு, அதற்கு உரிய கால அவகாசம் வழங்கி, கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை பாதிக்காத வகையில், மருத்துவக் கல்லூரிகள் அங்கீகாரத்தை திரும்ப வழங்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இது தொடர்பாக தமிழ்நாடு மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறது.

**ஆர்ப்பாட்டம்**

தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று அரசு மருத்துவக் கல்லூரிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்வதை நிறுத்துமாறும், கல்வி ஆண்டில் மாணவர் சேர்க்கை பாதிக்காத வகையில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி, சென்னை, திருச்சி, தர்மபுரி ஆகிய இடங்களில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என கூட்டம் முடிவு செய்தது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வடகாடு த. நல்லதம்பி
### மே 30 (2014)



தமது இளம் வயதிலேயே திராவிட இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு,நாடக மன்றம் ஒன்றினை தானே துவக்கி, அதில் தானும் நடித்து அப்பகுதி முழுவதும் திராவிடக் கொள்கைகளை பரப்பினார். கழகம் துவங்கிய பின்னர் அதில் இணைந்து பணியாற்றினார்.

அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சீரணி இயக்கத்தில் ஆலங்குடி பகுதி தலைவர் – திருவரங்குளம் ஒன்றியச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட விவசாய அணிச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.


புதுக்கோட்டை நிலவள வங்கி தலைவராகவும், இயக்குநராகவும் – மாவட்ட அரசு மருத்துவமனை ஆலோசனை உறுப்பினராக பதவி வகித்தவர்.

1962 விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் – 1964 இந்தி எதிர்ப்பு சட்ட எரிப்பு போராட்டம் – இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் – 1986 சட்டநகல் எரிப்பு போராட்டம் ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறைத் தண்டனை பெற்றதோடு நெருக்கடி நிலை மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மு. அரங்கநாதன்
### மே 30 (2004)



திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய காலம் தொட்டு கழகப் பணியாற்றியவர்.

திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளராகவும் – தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றவர்.

விலைவாசிப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.